விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 சித்திரை 25 றஜப் 13 இதழ் 84
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8—5—82

## கமலஹாசன் மயிரிழையில் உயிர் தப்பினர்

### பஸ் விபத்து: 8 பேர் பலி!

(சென்னை)

ஹிமாலயப்பிரதேசத்தில் நேற்று நிழ்கந்த பஸ் விபத்தில் சென்னை திரைப்பட நிறுவனமொன்றைச் சேர்ந்த எட்டுப்பேர் பலியானர்கள். பதினறு பேர் காயமடைந்தனர்.

தமிழ்ப் படமொன்றைத் தயாரிப்பதில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தமிழக தமிழ் திரைப் படகுழுவைச்சேர்ந்த இருபத்து எட்டுப்பேர் பிரயாணம் செய்த பஸ் விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டது.

இப்படப்பிடிப்பின் வெளிப் புறக்காட்சியில் கொண்ட நடிகர் கமலஹாசனும் இயக்குநர் கே. பாலசந்தரும் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்கள். இவர்களிருவரும் நேற்று விமான மார்க்கமாக சென்னை திரும்பினர்கள்.

இவ்விபத்தில் திரைப்படத் துறை தொழில் நுட்பவியலாளர்கள் பலியானதாகவும், படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

★ போக்லண்ட் நெருக்கடி தீவிரமடைகிறது:

# பிரிட்டிஷ் எம்.பி.க்கள் ஆவேசம்

## ஆர்ஜென்டீனவை நிர்மூலமாக்குமாறு கோரிக்கை!

### அமைதி முயற்சியில் ஐ. நா. செயலாளர்

லண்டன், மே 7

"போக்லண்ட் தீவுகளுக்கு அருகே பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலை மூழ்கடித்து, கடற்படை ஒன்றை ஒழித்துக்கட்டிய ஆர்ஜென்டீனவின் விமானத்தளங்களை உடனடியாகக் குண்டுவீசி அழிக்கவேண்டும். அதேசமயம் போக்லண்ட்நெருக்கடியைச்சமாதானவழியில் தீர்க்கத் தவறும் பட்சத்தில் ஆர்ஜென்டீன மீது தாக்குதல் நடத்தி, அந்நாட்டுப் படைகளை நிர்மூலமாக்கவேண்டும்."

இவ்வாறு பிரிட்டிஷ் பாரா சர்வேடிவ் எம்பிக்கள் பலர் ளுமன்றத்தில் ஆளும் கொன் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

கொன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 20 எம்பிக்கள் கையெழுத்திட்டு இதுதொடர்பான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இதே சமயம் போக்லண்ட் நெருக்கடியை தீர்த்து வைப்பதற்குத் தடையாக இருக்கும் ஆர்ஜன்டீனவின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரிட்டன் தயாராக உள்ளது என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. ஜிம் நோட்டன் பாராளுமன்றத்தில் வதரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, போக்லண்ட்நெருக்கடி தீர்வுக்குஇராணுவநடவடிக்கைஅவசியமென்றும்பிரிட்டிஷ் கடற்படை தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் பிரதமர் திருமதி தட்சர் நேற்றுப் பாராளுமன்றத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

### பற்றிக்குக்கு மற்றுமொரு பதவி

[யாழ்ப்பாணம்]

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் யாழ். மாவட்ட அபி

(8ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தர்மபாலன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மேலதிகஅதிபர் திரு. எஸ். தர்மபாலன் யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக கவுன்சில் இந்த நியமனத்தைச் செய்துள்ளது

திரு. தர்மபாலன் பதிவாளராக நிரந்தரமாகப் பணியாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் விரைவில் புதிய பதவியை ஏற்பார்.

அண்மைக்காலமாக யாழ். பல்கலைக்கழக நிரந்தர பதிவாளராக எவரும் இல்லாதிருந்தது தெரிந்ததே. (இ)

### "பனம்பொருள் அபிவிருத்தி புத்துயிர்பெறுகிறது!"

#### திறப்புவிழாவில் பாராட்டு

(மன்னர்)

"கடந்த பல காலமாக மன்னர் மாவட்டத்தில் பனம்பொருள் அபிவிருத்தி, சொல்லளவில் மட்டும் இருந்தது தூங்கிக்கிடந்த இத்திட்டத்திற்குச் சபையின்புதிய தலைவர் திரு.கே.நடராசாபுத்துயிரளித்துக் குறுகிய காலத்தில் எடுத்த பெருமுயற்சியின் பலனாக இன்று மூன்று நிலையங்கள் மன்னரில் திறக்கட்டடுகின்றன."

இவ்வாறு மன்னர் எம். பி. திரு. பி. எஸ் சூசைதாசன், மன்னர் பிரதான வீதியிற் 'கற்பகம்' பனம் பொருட்கள் விற்பனை நிலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

'கற்பகம்' விற்பனை நிலையமும், கொள்வனவு நிலையமும் ஏழைமக்களின் நாளாந்தச் சீவியத்துக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன. சங்ககாலத்திலிருந்தே பனையின் பயன் பற்றிப் பாடல்கள் கூறுகின்றன. கம்பர், ஔவையார், வள்ளுவர் ஆகியோர் பல சந்தர்ப்பங்களில் பனை பற்றிப் பாடியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா பேசுகையில், "பனையை நம்பி வாழுகின்ற மன்னர் மக்களின் அபிவிருத்திக்கு இன்று வித்திடப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் திரு. த. வாமதேவன் எடுத்த துரித நடவடிக்கை காரணமாக இன்று உருப்படியான ஒரு அபிவிருத்திப்

[8ம் பக்கம் பார்க்க]

### கடலில் மூழ்கவிருந்த

## இரு வெளிநாட்டவரை மீனவர்கள் காப்பாற்றினர்

[திருகோணமலை]

திருகோணமலை பிரெட்றிக் கோட்டைக்கு அருகில் இருக்கும் டச்சுக்குடாக் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது மூழ்கவிருந்த இருவெளிநாட்டு உல்லாசப் பயணிகளை அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் உரிய நேரத்தில் காப்பாற்றினர்.

மூன்று வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் டச்சுக்குடாக் கடலில் வெகுதூரம்வரை சென்று நீராடிக்கொண்டிருந்தனர். எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படவே இவர்களில் நன்கு நீந்தக்கூடிய ஒருவர் அவ்விடத்திலிருந்தும் நீந்திக் கரைசேர்ந்தார். மற்றைய இருவரும் தத்தளித்தபடி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர்.

நிலைமையை அறிந்த அப்பகுதி மீனவர்கள் உடனடியாகத் தமது மீன்பிடிக் கலங்களில் ஏறிச்சென்று தத்தளித்துக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர். அத்துடன் அவ்வெளிநாட்டவர் இருவருக்கும் முதலுதவியையும் அளித்தனர். [கி]

### ஆயுர்வேத மருந்துகள் இல்லை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம உப-அலுவலகம் நடாத்தும் ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்துவகைகள் ஒன்றுமில்லாததால் நோயாளர்கள் தினமும் வந்து திரும்பிச் செல்கின்றனர்.

மாவட்டசபை நிர்வாகம் பொறுப்பு ஏற்றபின்னர் ஆயுர்வேத கூட்டுத்தாபனம் எந்த விதமான மருந்துவகைகளையும் வழங்கவில்லை. இதனல் நோயாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

### சுவாமி பூவளவன் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த சுவாமி பூவளவன் இன்று தமது பாதயாத்திரையை ஆரம்பிக்கிருர்,

இன்று காலை எட்டு மணிக்கு நல்லூரிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்டு நாவற்குழி நோக்கிப் புறப்படுவார் என்று முன்னர் நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்ட போதிலும் சுவாமி பூவளவன் நல்லூரிலிருந்து கோப்பாய் வழியாக கரவெட்டிமேற்குவெல்லன் விநாயகர் சென்று பின்னர் கொடிகாமம் வழியாக கிளிநொச்சி புறப்படுவார்.

(2ம் பக்கம் பார்க்க)

நவீனமுறையில் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட
பனைவெல்லம்
விற்பனைக்கு உண்டு
இன்றே நாடுங்கள்
கற்பகம்
(யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமை)
தலைவர்
பனம் பொருள் அபிவிருத்திச்சபை
3111

பயிற்சி
றேடியோ-டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் HOTEL MANAGEMENT மூன்றுமாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம்: 10 - 5 - 82 அனைவரும் சேரலாம். நேரில் வரவும்.
நாஷனல் அக்கடமி
மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
3123

### மணிவாக்கு

முன்னோர்களால் ஏற்பட்ட நலன்களுக்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களே; எனினும், பழையன இக்காலத்துக்குப் பொருத்தமில்லாதவைகளாயிருந்தால் அவைகளை மறுக்கும் சுதந்திரப் புத்தியும் நமக்கு இருக்க வேண்டும்.

—இங்கர்சால்

# சுவாமி பூவளவன் 30 நாள் பாதயாத்திரை

## இன்று காலை நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உலக ஆன்மீகத் தலைமைப் பீடத்தின் தலைவர் சுவாமி பூவளவன் முப்பது நாள் பாதயாத்திரையை இன்று காலை ஆரம்பிக்கின்றார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து இன்றுகாலை எட்டு மணிக்கு இச்சமய பாதயாத்திரையை சுவாமி பூவளவன் ஆரம்பிப்பார்.

இப்பாதயாத்திரையின் போது சுவாமி பூவளவன் நீராகாரத்தை மட்டுமே அருந்துவார்.

யாழ் மேயர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நளை ஆதீனத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் பெருந்திரளான அடியார்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதயாத்திரையை யாழ். மேயர் ஆரம்பித்து வைப்பார். ஆதரவாளர்கள், சுவாமி பூவளவனுடன் நாவற்குழி வரை செல்வார்கள். நாவற்குழியில் சுவாமிகள் ஆதரவாளர்களினால் சிறப்பாக வரவேற்கப்பட்டு, சில மைல் தூரம்வரை அவர்களும்பாத யாத்திரையை மேற்கொள்வார்கள். இவ்விதமாக ஒவ்வொரு இடத்திலும் சுவாமிகள் வரவேற்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

முப்பது நாள் பாத யாத்திரையை மேற்கொள்ளும் சுவாமி பூவளவன் ஜூன் மாதம் எட்டாம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தை அடைவார். இவரை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஆகியோரும் அங்கு வரவேற்பார்கள்.

# நமது நோக்கு

## பௌத்த மத போதனை

பௌத்த மதம் அக்காலத்தில் பரவியதற்கும் இக்காலத்தில் பெருஞ் சமயமாக நிலைத்திருப்பதற்கும் சிறந்த காரணம் அதன் சங்கமேயாகும். பௌத்த துறவிகளுடைய கூட்டத்திற்குச் சங்கம் என்பது பெயர்.

பௌத்தர்கள் புத்தரையும், தருமத்தையும், சங்கத்தையும் மும்மணிகளாகப் போற்றுகின்றார்கள்.

சங்கம்என்ற சொல்லுக்கு ஏற்றமளித்தவர் பௌத்தரே என்று கூறுதல் மிகையாகாது. அம்முறையில் பாண்டிய மன்னர்கள் தமிழகத்தில் மூன்று சங்கங்கள் நிறுவி முத்தமிழையும் வளர்த்தார்கள். சைவம் நன்றாக நிலைபெறுதற் பொருட்டும், எங்கும் பரவுதற் பொருட்டும் சிவனடியார் திருக்கூட்டம் தமிழகத்தில் ஏற்படுவதாயிற்று.

2000 ஆண்டுகளுக்கு முன் வடநாட்டிலே புத்தபிரான் போதித்தது போல் தென்நாட்டிலே தெய்வப் புலவர் திருவள்ளுவர் போதித்தாரென்பது இன்றைய உலகுக்குப் பொருத்தமான கருத்தாம்.

எவ்வாறு பொருத்தமென்பது எதிர்மறையாகவே காணப்படும். இவ்விரு (பௌத்தம் சைவம்) சமுதாயங்களின் வீழ்ச்சி நிலையில்விளங்கிக்கொள்ளலாம்.

'இந்த அதர்மச் செயல்களை உடனே நிறுத்துக' என்று தமது வெசாக்செய்தியில் விடுத்தவர் சங்கத்தின் பெருந்தூணான அஸ்கிரிய பீட மகாநாயக்கதேரோ சங்கைக்குரிய பலிப்பானே சிறிசாந்தானந்த தேரோ அவர்கள் —

அரசியல்வாதிகளின் அண்டப் புளுகை வெறுத்த அஸ்கிரியபீடத் தலைவர் வெசாக் தினமான மங்கள தினத்திலேயே இன்று நாட்டில் நடைபெறும் அக்கிரமங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டென்ற பாணியில் தீவிரமாகக் கண்டித்திருப்பது அரசாங்கத்தின் செவியில் புகாவிட்டாலும், மக்களின் அவசிய கவனத்துக்குரியது.

தார்மீக சமுதாயம் பேச்சால் உருவாகாது; வெறும் போதனையால் வேரூன்றி விடாது; அரசாங்கத்தின் திடமான செயல்களால் முன்னேற்றமடைய முடியும்.

மிருக பலியும்(உணவுக்கு) மதுபான உற்பத்தியும், பொருளாதார மேம்பாட்டுக்குரியவையாக அரசு கருதுவதால் இவை சமுதாய வாழ்வில் நாகரிகச் சின்னங்களாக கருதப்பட்டு வருகின்றன. மேனாட்டுநாகரிகத்தின் இறக்குமதிப் பொருட்கள் புராதன பௌத்த பண்பாட்டுக்கு நாசம் விளைவிக்கின்றன. இதுவே பௌத்த சங்கத் தலைவரின் உள்ளக்குமுறல்.

துறவறத்தை மேற்கொண்ட புத்தர், கொல்லாமை என்னும் அறத்தின் பெருமையை எல்லார்க்கும் எடுத்துரைத்தார்; அது போன்று தமிழகத்தில் திருவள்ளுவர் செய்தாரென்பது,

"நன்றாகும்ஆக்கம் பெரி
தெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம்
கடை"

என்ற திருக்குறளால் தெளிவாகின்றது.

பாரதப் பண்பாட்டிலும் பௌத்தமதத்திலும் பேரபிமானம் கொண்ட ஆங்கிலப் பிரபல விஞ்ஞானி திரு. ஜே. பீ. என். ஹல்டேன் அவர்கள் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவில் நெடுங்காலம் வாழ்ந்தவர்.

சைவ உணவில் நன்கு பழகியவர். இலங்கைக்கொரு பெரும் விஞ்ஞான மாநாட்டில் பங்குபற்ற வந்த பொழுது, பிரபல பௌத்த ஹோட்டலுக்கு தம்மை அழைத்துச் செல்லும்படி கேட்டாராம். புதுமையான தாவர போசன வகை கிடைக்குமென்பதே அவருடைய பேரவா. தாமெதிர்பாராதவகையில் பம்பலப்பிட்டி 'கிறீன்லன்ட்ஸ் கிட்டியதும், அவர் ஏமாற்றம் தெரிவித்தாராம்! இது போன்ற எத்தனை சைவ ஹோட்டல்களைச் சென்னையில் பார்த்திருக்கிறேன்! உங்கள் நாட்டின் பௌத்த கலாசாரத்துக்குரிய உணவே நாம் தேடுவது. என்பது அவருடைய விளக்கம்.

புத்தபிரான் அவதரித்த ஞானம்பெற்ற, சமாதியடைந்த முப் பெரும் நிகழ்ச்சிகள் குறிக்கும் இந்த முக்கியதினம் அகில உலகுக்குமே சிறந்த கருத்துடைய தினமாகும். ஆனால் இன்று களியாட்டமும் அலங்கார வைபமும்,பைலாவும்,வியாபார நோக்கும் நிறைந்த தினமாகக் காணப்படுகிறதென்று வேதனைப்படுகிறார் அஸ்கிரிய பீடத்தலைவர்.

பௌத்தம், இந்து மதத்தைப்போல பெரிய கோட்பாடுகளை மட்டுமல்ல, சிறு கடமைகளையும் வற்புறுத்துகின்றது.

எல்லோரும் இனிது வாழ வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளையும், பிறர்க்கு இடையூறு இல்லாத வகையில் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற சிறந்த கொள்கையையும் காணலாம்.

இதுவே எல்லோருக்கும் ஒத்த உரிமை நல்கும் பெருந்தன்மை; உரிமை வாழ்க்கைக்கு அடிப்படையான சிறந்த பண்பு.

மற்றவர்களின் உரிமைக்கு இடர் விளைக்கின்றவன் உரிமையுணர்வே இல்லாதவன். உரிமை என்பது கொடுக்கும் அளவே கொள்ளப்படுகின்ற பொருள், பிறர்க்கு உரிமை கொடுக்காமல் தான்மட்டும் உரிமையோடு வாழ முயல்கின்றவன் உரிமையாளன் அல்ல.

தார்மீக சமுதாயத்தில் பெரு நம்பிக்கை கொண்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனா, மதங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க முயல்கின்றார். ஆயினும் கதிர்காமத்தில் சைவர்களுக்குரிய மடம் கட்டப்படுவதற்கு இன்றும் தடையிருப்பது பௌத்த தர்மமாகாதென்பதை நாம் மறக்க முடியாது.

# தமிழக ஆஸ்தான நர்த்தகி பட்டத்தில் அரசியல் பின்னணி கிடையாது

## 5 வயதில் பயின்று 8 வயதில் அரங்கேறினேன்

## சினிமாவில் சிறிதும் நாட்டம் இல்லை!

சுவர்ணமுகியுடன் ஒரு சந்திப்பு
பேட்டி: இரா. உதயகுமார்

"எனக்கோ அல்லது என் குடும்பத்தினருக்கோ அரசியலில் எவ்வித நாட்டமும் இல்லை. தமிழக அரசினால் வழங்கப்பட்டு "தமிழக ஆஸ்தான நர்த்தகி' பட்டம் அரசியல் பின்னணியில் வழங்கப்படவில்லை என்னைப்பொறுத்த வரையில் என்னுடைய நாட்டம் பரத நாட்டியத் துறையில் மட்டும்தான்"

இவ்வாறு அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டின் இறுதி நாள் விழாவில் பரத நாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகியுடன் சந்தித்து சில நிமிடங்கள் உரையாடியபோது என்னிடம் தெரிவித்தார்.

உங்கள் ஆஸ்தான நர்த்தகி பட்டம் அரசியல் பின்னணியில் வழங்கப்பட்டதா? என்று நான் கேட்ட கேள்விக்குத் தொடர்ந்து பதிலளிக்கையில் அவர் கூறியதாவது;

1977 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி சென்னை ராஜாஜி மண்டபத்தில் எனது நடன நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. அந் நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் திரு.எம். ஜி. ராமச்சந்திரன் கலந்துகொண்டார். என நடனத்தைரசித்த அவர் என்னையும் நடனத்தையும பாராட்டிப்பேசிய தனது பேச்சின் மத்தியில் தமிழக அரசின நர்த்தகியாக நியமிக்கின்றேன் என்றார். என்னால் நம்ப முடியவில்லை. மகிழ்ச்சிக் கடலில் அதிர்ச்சியும் அடைத்தேன். காரணம் எனது 16 ம் வயதில் அப்பதவியைப் பெற்றுக்கொண்டேன்". என்று கூறினார்.

பரதநாட்டியக் கலையில் எப்படி நுழைந்தீர்கள் என்பதை சுருக்கமாகச் சொல்ல முடியுமா? என்று கேட்டேன்.

"என்னுடைய தகப்பன்சம்பாதிபூபால், தாயார் ரஞ்சினி பூபால் ஆகியோர் நடன ஆசிரியர்கள்: அவர்களின் ஆசியும் ஒத்துழைப்பினாலுந்தான் நான் முன்னேற்றமடைந்தேன், என் தந்தையார் பரதநாட்டியக் கலையை பாரம்பரிய கலைஞர்களிடமும், பழைய நூல்களிலும் நன்கு கற்றவர். சிதம்பரம், தஞ்சாவூர், கும்பகோணம், மதுரை, காஞ்சிபுரம் ஆகிய ஆலயங்களிலுள்ள சிற்பங்களின் மூலம் காரணங்களை நன்கு அறிந்துகொண்டு அதனை தன் நடனத்திலும் எனது நடனத்திலும் பிரதிபலிக்கச்செய்வார்.

குறிப்பாக சிவனும் சக்தியும் ஊழி நடனத்தில் எடுத்தாண்டதாகச் சொல்லப்படும் 108கரணங்களையும் யோகாசன முறையில் காணமுடிகிறது, இதனைச் செய்வதற்கு விசேட பயிற்சி தேவை ஆனால் என்னை பயிற்றுவிக்க என் தந்தை மிகவும் அக்கறை கொண்டிருந்தார் என்றார்.

எத்தனையாவது வயதில் நடன உலகில் நுழைந்தீர்கள்? என்று கேட்டபோது—

ஐந்தாவது வயதில் தந்தையிடம் பயிலத் தொடங்கினேன். எட்டுவயதில் ஆந்திர பிரதேச ஊரான நாயுடு என்னுமிடத்தில் அரங்கேற்றம் நடைபெற்றது. பத்தாவது வயது தொடக்கம் இன்று இருபத்திரண்டு வயதுவரை தொடர்ந்து ஆடிக்கொண்டே இருக்கின்றேன்.

1978ல் பஞ்சாப், பீகார், ஹலியானா மாநிலங்களில் என் குழுவினருடன், நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளேன். 1980ல் பஞ்சாப் மாநிலத்தில் என் நிகழ்ச்சிக்கு கௌரவமாக "சொரோபாய்" விருது கிடைத்தது. 1981ல் தமிழக இயலிசை நாடக மன்றம் "கலைமாணி" பட்டம் வழங்கியுள்ளது." என்றார்

இலங்கை, இந்தியாவை தவிர வேறு நாடுகளில் உங்கள் நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளதா?

1978ல் பிரான்ஸ் நாட்டில் "ஜீனஸஸ் முறிக்கேல் டிபிரான்ஸ்" அழைப்பில் அந்நாட்டின் பல பாகங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்தினேன். 1979ல் மீண்டும் தேசிய கழகம் ஒன்றின் அழைப்பில் நிகழ்ச்சிகள் நடாத்தினேன். 1980ல் தமிழக அரசு மொரீஷியஸ் தீவுக்கு அனுப்பிவைத்தது. அங்கும் பல நிகழ்ச்சிகள் நடாத்தினேன். எதிர்வரும் அக்டோபர் மாதம் பாரிஸில் இடம்பெறும் சர்வதேச ஆடல், பாடல் விழாவில் கலந்து கொள்ள இருக்கின்றேன்." என்று கூறினார்,

சினிமாத்துறையில் தொடர்பு உண்டா?

"ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது" தமிழ்படத்திலும், மற்றுமோர் தெலுங்குப் படத்திலும் என் நாட்டியம் இடம் பெற்றாலும் அதில் எனக்கு அக்கறை இல்லை. நாட்டியக் கலையை நன்கு வளர்க்க வேண்டுமென்பதே எனது இலட்சியம். இந்நிலையில்தான் தமிழ் நாட்டில் "பரதநாட்டிய கரணலய" என்ற நடனக் கல்லூரியை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்த, சுவர்ணமுகி நர்த்திகள் பல ஐதிஸ்பரம் போன்றஉருப்படிகளில் இரு கோவைகளிடையே பல்லவி பாடும்போது ஓய்வு எடுக்கின்றார்கள். இந்த ஓய்வு எடுப்பதை நான்விரும்புவதில்லைஎன்றும்தெரிவித்தார்.

## பாரதி நூற்றாண்டுவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பாரதி நூற்றாண்டுவிழா இன்று சனிக்கிழமை மாலை கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவை திரு.க. தியாக ராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

"பாரதி ஒரு காலத்தின் கண்ணாடி" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மொழிப் பாட்டுத்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாசும், 'பாரதியின் சுதந்திரவேட்கை' என்ற தலைப்பில் திரு. கோவை மகேசனும், "பாரதியும் பெண் விடுதலையும்" என்ற தலைப்பில் திருமதி மனோன் மணி சண்முகதாசும் சொற்பொழிவாற்றுவார்கள்.

"பாரதி நீ இன்றிருந்தால்" என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கிற்கு கவிஞர் வீரமணி ஐயர் தலைமை தாங்குவார். இக்கவியரங்கில் புலவர் ம. பார்வதிநாதசிவம். திரு. கா. சே. நடராசா, கவிஞர் ச. வே பஞ்சாட்சரம், திரு. வே.சண்முகலிங்கம் ஆகியோர் பங்குபற்றுவர்.

"பாரதி பாஞ்சாலி சபதத்தால் வலியுறுத்த விரும்பியது "இலக்கிய உணர்வையா? விடுதலைஉணர்வையா?"என்ற தலைப்பிலான பட்டிமன்றத்தில் "இலக்கிய உணர்வை" ஆதரித்து திருவாளர்கள் சோ. பத்மநாதன், இ. ஜெயராஜ், க. குமாரதாசன் ஆகியோரும், 'விடுதலைஉணர்வை' ஆதரித்து காரை செ சுந்தரம் பிள்ளை, திரு. குமரன், திரு. தி. திருநந்தகுமார் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

நடுவராக திரு. க. சிவராமலிங்கம் பணிபுரிவார். (வெ)

### போக்லண்ட் தீவுகள் பிரச்னை:

# பிரிட்டனுக்கு ராணுவ ராஜதந்திர தோல்வியாம்!

லண்டன் மே. 7

**போக்லண்ட் தீவுகள் நெருக்கடி பிரிட்டனுக்கு இராணுவ, இராஜதந்திர ரீதியில் தோல்வியை அளித்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.**

ஐ. நா. ஸ்தாபனத்தின் சமாதானத் திட்டத்திற்கு பிரிட்டனும், ஆர்ஜென்டீனுவும் இணங்கியுள்ளதாக ஐ. நா. பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

### முதலில் யுத்த நிறுத்தம்

இச் சமாதானத் திட்டத்தின் பிரகாரம் முதலில் இருநாடுகளும் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், அதன் பின் துருப்புக்களை வாபஸ்பெற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டீனு முதலில் போக்லண்ட் தீவுகளிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் பெற்றுல் [illegible]தான் யுத்தநிறுத்தம் செய்யப்படுமென்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

### மீண்டும் சுட்டுவீழ்த்தினர்

பிரிட்டனின் யுத்தக்கப்பலை ஆர்ஜென்டீனு மூழ்கடித்ததைத் தொடர்ந்து, பிரிட்டன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை தென் அத்திலாந்திக் சமுத்திரத்தில் நேற்று பிரிட்டனின் இரண்டு யுத்த விமானங்களை ஆர்ஜென்டீனு சுட்டு வீழ்த்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனே, ஆர்ஜென்டீனுவோ யுத்த நிறுத்தம் செய்வதற்கான அறிகுறிகள் காணப்படவில்லையென்று அமெரிக்க உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். [வெ]

---

### வெள்ளைமாளிகையில்:

## 'என்றுவது ஒரு நாள்' நாம் குடியேறுவோம்

### ஜோன்ஹிங்லி காதலிக்குக் கடிதம்

வாஷிங்டன். மே, 7

''என்றுவது ஒரு நாள் நானும் நீயும் வெள்ளைமாளிகையில் குடியேறுவோம். அதுவரைக்கும் நீ தயவு செய்து கன்னியாகவே கூடியவரை இருக்கவும்''.

இவ்வாறுஎழுதப்பட்டகடிதமொன்றை பிரபல ஹொலிவூர்ட் நடிகையான ஜோடி பொஸ்டருக்கு அனுப்புவதற்காக அமெரிக்க ஜனுதிபதியான ரேகனல்ட் ரீகனைக் கடந்த வருடம் சுட்டுக்கொல்ல முயன்ற ஜோன்ஹிங்லி என்பவர் வைத்திருந்தாரென துப்பறியும் அதிகாரியொருவர் ஜனுதிபதியின் கொலை முயற்சி ப றி நடத்தப்பட்டுவரும் விசாரணையின் போது தெரிவித்தார்.

இத்தகவலை வெளியிட்ட துப்பறியும் அதிகாரி மேலும் தனது விளக்கத்தில் தெரிவித்ததாவது:– ',ஜனுதிபதி ரீகன் சுட்டுக் காயப்படுத்தப்பட்டதையடுத்து ஜோன்ஹிங்லி தங்கியிருந்த அறையை நான் சோதனையிட்டேன். அவ்வறையில் 'டாக்ஸி டிறைவர்' என்ற ஆங்கிலப்படத்தில் விபச்சாரியாக ப கமேற்றுநடித்த ஜோடி பொஸ்டருக்கு கவிதைவடிவில் ஜோன் ஹிங்லி பல கடிதங்களை எழுதிவைத்திருந்தார்,

இக்கடிதங்களை விட விமானமொன்றைக் கடத்தும் விதத்தில் அதன் விமானியை மிரட்டிப்பணிய வைப்பதற்காக வழங்குவதற்கென சில கட்டளைகளையும் காகிதமொன்றிலே ஹிங்லிஎழுதிவைத்திருந்தார்.'' என அவ்வதிகாரிதெரிவித்தார். [கி]

---

## இசை விழா: இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று ஆரம்பமான யாழ். அண்ணுமலை இசைத் தமிழ் மன்றத்தின் இன்றைய தமிழ் இசை விழா நிகழ்ச்சிகள் வருமாறு;–

அண்ணுமலை இசைக் கல்லூரி மாணவர்கள், மிருதங்கம், பாட்டு, பாட்டு செல்வி ஜெயராணி மயில் வாகனம், வயலின்: செல்வி ரஞ்சினி வீரசிங்கம மிருதங்கம்: க. சுந்தரமூர்த்தி பாட்டு: திரு.எஸ்.பத்மலிங்கம், வயலின்; திரு. வி. கே. குமாரசாமி மிருதங்கம்: திரு.எம்.சிதம்பரநாதன்.

---

## இஸ்லாமிய அபிவிருத்தி வங்கிக் குழு

(கொழும்பு)

சவூதி அரேபியாவின் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் மூன்று அதிகாரிகளடங்கிய குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இலங்கையின் அரசாங்க தனியார் கைத்தொழில் துறைகளுக்கு கடனுதவி வழங்குவது பற்றி இக்குழு ஆராயவுள்ளது, (வெ

---

## மதங்களின்றி சுதந்திரத்தை பேணிப்பாதுகாக்க முடியாது

### ஜனுதிபதி ரீகன் கருத்து

வாஷிங்டன் மே. 7

''மதங்களின்றி சுதந்திரத்தைப் பேணிப்பாதுகாக்க முடியாது. இதனுல்தான் பாடசாலைகளில் சமயபாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது''. என்று அமெரிக்க ஜனுதிபதி திரு. றேனல்ட் ரீகன் வெள்ளைமாளிகையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். (வெ)

---

## வளர்முக நாடுகளுக்கு இந்தியா உதவி

புதுடில்லி மே. 7

அணிசேரா இயக்கத்திலுள்ள வளர்முக நாடுகளுக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப உதவிகளை வழங்க இந்தியா தீர்மானித்துள்ளது.

வளர்முக நாடுகள் வீடமைப்பு, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் இந்தியா கேட்டுள்ளது. [வெ]

---

## ஜனுதிபதி சுஹார்ட்டோவுக்கு அமோக வெற்றி

ஜகார்தா மெ. 7

இந்தோனேசியாவின் ஆளுங் கட்சியான ஜனுதிபதி சுஹார்ட்டோவின் 'கோல்கார்' கட்சிக்கு தற்போது நடைபெற்று வரும் பொதுத்தேர்தலில் அமோக வெற்றி கிடைத்து வருகின்றது.

வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளில் ஆளுங் கட்சியான 'கோல்கார்' கட்சிக்கு 4கோடியே 60 லட்சம் வாக்குகள் கிடைத்துள்ளன.

ஜனுதிபதி சுஹார்ட்டோ தலைமையிலான இராணுவத்தின் ஆதரவுடன்கூடிய 'கோல்கார்' கட்சிக்கு 78ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் பார்க்க 3சத வீதம் கூடுதலான வாக்குகள் இம்முறை கிடைத்துள்ளன.

இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் கோல்கார் கட்சி அமோக வெற்றியீட்டுமா வென்பது சந்தேகமாக விருந்தபோதிலும் அங்கும் இக்கட்சிக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது. [கி]

---

## "சமாஜத்தின் சிபார்சு மீது சமாதான நீதவான்களை நியமிக்க வேண்டும்"

(அரியாலை)

''ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலும், சமாஜத்திஞல்தெரிவுசெய்யப்படும்உறுப்பினர்களை சமாதான நீதவான்களாக நியமிக்க ஆவன செய்ய வேண்டும்.''

இவ்வாறு சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாஜம் யாழ் மாவட்டத் தேசியப் பேரவை உறுப்பினர்களைக் கோரியுள்ளது.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜத்தின் பொது நிர்வாக சபை அங்கத்தவர்கள், யாழ்.மாவட்ட தேசியபேரவை உறுப்பினர்களுடன் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடத்திய சந்திப்பின்போது இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

இச்சமாஜத்தின் சார்பில் தேசியப் பேரவை உறுப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரில் ''அண்மையில் குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் சமூக உறுப்பினர்கள் பலர் பெரும் நஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கின்ருர்கள். அவர்களுக்கு அரசிடமிருந்து உரிய நஷ்டஈட்டைப் பெற்றுத்தர வேண்டுமென்றும், தொழில் நிலையங்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கைஎடுக்கவேண்டும்''

''சமூகக் குறைபாடுகளை வேரோடு களைவதற்கான ஒரு செயல்பக்கமாகக் குடிமைத் தொழில் முறையை ஒழிக்க கிராமங்கள்தோறும் முற்போக்குச் சக்திகளைக்கொண்ட குழுக்களை அமைத்துச் செயல்பட வைக்கவேண்டும்.''

''குடியிருப்பு வசதியற்ற எமது சமூக உறுப்பினர்களுக்குப் பிரதமரின் மாதிரிக் கிராமத் திட்டம் ஒன்றின் மூலம் அல்லது ஏனைய வீடமைப்புத் திட்டங்களின் மூலம் வசதி பெற உதவவேண்டும்.''

''சமூக உறுப்பினர்கள் அரச திணைக்கழகங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் வேலை வாய்ப்புக்கள்பெறஉதவவேண்டும்.''

''சமூக படித்த வாலிபர்களுக்கு குடியேற்றத்திட்டங்களில் காணி பெறுவதற்கு உதவ வேண்டும்.''

''சமூக தொழில் திணைக்களத்திஞடாக அல்லது வேறு வழிகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள உதவவேண்டும்.''

இந்தச் சந்திப்பின் போது எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ அமிர்தலிங்கம் தலைமையில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம்.சிவசிதம்பரம், தேசியப்பேரவைஉறுப்பினர்களான திருவாளர்கள் வி. தர்மலிங்கம், வெ. யோகேஸ்வரன், த. இராசலிங்ம், எஸ். துரைரத்தினம், மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசப் பொதுச்செயலாளர் திரு. க. மாயாதிரவியம் வரவேற்புரை நிகழ்த்திஞர். சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜப் பிரதித்தலைவர் திரு. நா. தங்கவடிவேல் நன்றி கூறிஞர்.

---

### ஆனமடுவ தேர்தல் ஆட்சேபமனு:

## செலவு தொகையுடன் தள்ளுபடி!

[கொழும்பு]

ஆனமடுவ தேர்தல் ஆட்சேப மனுவில் திரு. விமலசூரியாவினுல் கட்டுப்பணம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் செலவு தொகையுடன தள்ளுபடி செய்தது.

1980ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி திரு. அசோகாவடிவ மங்காவ ஆனமடுவ தேர்தல் தொகுதியில் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்தே இம் மனு தாக்கல்செய்யப்பட்டது. [வெ]

---

## இந்திய ஜனுதிபதிக்கு அமோக வரவேற்பு

பெல்கிரேட் மே. 7

யூகோஸ்லாவியாவிற்கு விஜயம் செய்துள்ள இந்திய ஜனுதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டிக்கு அங்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (வெ)

---

## வருடாந்தக் கூட்டம்

[அரியாலை]

கோப்பாய் கிறிஸ்வத கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பழைய மாணவர்களுக்கும், கல்லூரிமாணவர்களுக்குமிடையில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறும். இதனைத் தொடர்ந்து இடம்பெறும்வருடாந்தக் கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகள் தெரிவும் இடப்பெறும்.

இளைஞர்களை திசைதிருப்பி

# கூட்டணியை பிளவுபடுத்த இடதுசாரிகள், தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்

## கல்குடா கூட்டத்தில் 'அமிர்'

[மட்டக்களம்பு நிருபர் இரா. துரைரத்தினம்]

'சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இயங்கவேண்டிய சக்தியை எங்கள் மீது திருப்பிவிட சில இடதுசாரி சக்திகள் அதிதீவிரவாத சக்திகள் போல நடந்து, இளைஞர்களை திசைதிருப்பிவருகிறார்கள். கூட்டணியைப் பிளவுபடுத்தத்திட்டமிட்டு வருகிறார்கள். ஆள்வோரின் அடிவருடிகள், தீவிரவாதிகள் சிலர், இடதுசாரிகள் சிலர் இந்தத் திட்டமிட்ட சதியை செய்து வருகிறார்கள். ஆகவே இதில் தம்பிமார் வழிதவறிப்போகாமல் விழிப்பாக இருக்கவேண் வேண்டும். மக்கள் சக்தியை ஒன்றுபடுத்தி தந்தை செல்வா எமக்கு விட்டுச்சென்ற இந்த இயக்கத்தைப்பலப்படுத்த வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்த திரு. அ. அமிர்தலிங்கம் கல்குடாத் தொகுதியிலுள்ள சந்திவெளிப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற கூட்டணிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய தொகுதிகளின் அமைப்பாளர்கள், உட்படப் பெருந்திரளான கூட்டணி ஆதரவாளர்கள், பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்து உரை நிகழ்த்திய திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:–

### அரசியலை அறியாதவர்கள்

'அண்மையில் கைதுசெய்யப்பட்ட கனககுலசிங்கம் எங்கே என்று தெரியாதநிலையில் இருக்கிறது. இதுபற்றி பூரண விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சைக் கேட்டுள்ளேன். எங்கள் இளைஞர்களுக்குத் துன்பம் வருகின்ற நேரத்தில் அதைத்தீர்க்கும் உணர்வோடுதான் நாம் செயல்படுகிறோம். மரத்தின் கிளையை வெட்டினாலும் மரத்தைவெட்டியவனுக்கும் மரம் நிழல் கொடுக்கும். சில தம்பிமார்கள் இதை உணராமல் 'ஜீப்'வண்டியை எரிக்கிறார்கள். அவர்களுக்குக்கூட துன்பம்வந்தாலும் அவர்களுக்காக வாதாடவோ, நீதிமன்றம் செல்லவோ, ஆட்சிமன்றத்தில் போராடவோ நாங்கள் காத்திருக்கிறோம். தம்பிமார் பிழைவிட்டால் அதற்காக நாங்கள் அவர்களைப் புறக்கணிக்கமாட்டோம், ஆனால் சில நாசகாரச் சக்திகள் இளம் உள்ளங்களை இயக்கத்திலிருந்து பிரிக்க முயற்கிகள் எடுத்துவருகின்றன. அவர்களை வழி நடத்தச் சிலர் முன்வந்திருக்கிறார்கள். முன்பின் அரசியலை எட்டிப்பார்க்காத சிலர் இன்று முளைத்திருக்கிறார்கள். தாங்கள் சொகுசாக வாழ்க்கை நடத்துவதற்காக இளைஞர்களைத் தம்வசம் இழுப்பதற்குப் போலி நாடகம் ஆடுகிறார்கள். தம்பிமார்கள் அதற்கு ஒருபோதும் பலிக்கடாக்கள் ஆகக்கூடாது.

### இளைஞர்கள் சக்தி

'இளைஞர் சக்தியானது காட்டாற்று வெள்ளம் போன்றது. அணைக்கட்டி அதைச் சரியாகச்செலுத்தினால் தான் வாய்க்கால் வழியாக வெள்ளம் வயலுக்குப்போகும். அணை இல்லாவிட்டால் அனைத்தையும் அழித்துச்சென்றுவிடும்.

'நான் 20 வயதில் அரசியலில் சேர்ந்தேன். 35 வருடகாலமாக தந்தை செல்வாவின் பாதையில் நடந்துவந்துள்ளேன். நானும் இளமைத் துடிப்பில் சில நேரங்களில் தலைவர்களுடன் வாதாடியதுண்டு. அதெல்லாம் கட்சிக்குள்'

'பண்டா–செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டபோது அது தப்பு என வாதாடினேன். அப்பொழுது தலைவர்கள் விளங்கப்படுத்தினார்கள். அதை நாங்களும் ஏற்றுக்கொண்டோம். தலைமைக்குக் கட்டுப்பட்டுவந்தோம். இயக்கத்துக்குள் வாதிடலாம். ஆனால் இயக்கத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டுச்செயல்படவேண்டும்.

### திட்டுவதில் ஒற்றுமை

'தமிழ் இளைஞர் பேரவையை தம்பி காசிஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையில் அமைத்தோம். அவர்கள் சிறைசென்ற பின் சிலர் அதிலிருந்து பிரிந்து ஈழவிடுதலை இயக்கம் ஒன்றை உருவாக்கினார்கள். தீவிரம் போதாது எனப் பிரிந்து சென்ற ஈழவிடுதலை இயக்கம் இப்போது எங்கே? இப்பொழுது டாக்டர் தர்மலிங்கம் தலைமையில் தமிழ் ஈழ விடுதலைக்கழகம்என்ற இயக்கமொன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஏன் இப்படிப் பிரிந்துசெல்கிறார்களோ தெரியாது. ஆனால் ஒன்றைமட்டும் செய்கிறார்கள் எங்களைத் திட்டித்தீர்ப்பதில் ஒற்றுமையாக இருக்கிறார்கள்.

### கிழக்கையும் சிந்தியுங்கள்

இன்று கோவை மகேசன் சொல்கிறார், தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று. எதற்கும் யாழ்.மாவட்டத்தை வைத்துக்கொண்டு திட்டம் தீட்டக்கூடாது. கிழக்கு மாகாணத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். தேர்தலைப் பகிஷ்கரித்தால் அம்பாறையில் சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகளே வருவார்கள். அதேபோல மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அரசாங்கத்தின் ஒரு சில அடிவருடிகளுக்கே சந்தர்ப்பம் அமைத்துக்கொடுப்பதாக அமைந்துவிடும். அரசியல் ஞானம் அற்றவர்களின் வார்த்தையைக் கேட்டுத் தமிழ் மக்களை அழிந்துபோக விட நாம் தயாராக இல்லை.

'சும்மா இருந்த கோவை மகேசனை அச்சுக்கூடத்தில் அச்சுப்பிழை திருத்துவதற்கு சேர்த்துவிட்டேன். ஆனால் இன்று என்னையே திட்டித் தீர்க்கும் அளவுக்குவந்துவிட்டார்! இந்த அரைகுறை அரசியல் வாதியின் பேச்சை, எழுத்தைப் பற்றி பகுத்தறிவுபடைத்த தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள்.

'இன்று சிலர் கேட்கிறார்கள் ஏன் பேச்சுவார்த்தை என்று. அமரர் தந்தை செல்வாவே கூறியிருக்கிறார் பிரச்னைகளைப் பேசித் தீர்க்கவேண்டுமென்று! நாம் எமது இலட்சியத்தை விட்டுக்கொடுக்காத வகையில் எமது நிலையைப் பலப்படுத்துவதற்குப் பேச்சுவார்த்தை நடத்துவதில் என்ன தவறு? புன்னைக்குடா பிரச்னை, ஸ்ரீஷேந்தாமலைப் பிரச்னை, ஊர்காவல்படை, மாவட்ட சபைக்கான அதிகாரங்கள் போன்ற பல பிரச்னைகளுக்கான தீர்வைப் பேச்சுவார்த் மூலமே பெற்றிருக்கிறோம்.

### தீவிரவாதம் பிரச்னையைத் தீர்க்காது

புல்மோட்டை தென்னை மரவாடி போன்ற எல்லைப் பிரதேசங்களை அநுராதபுர மாவட்டத்துடன் சேர்க்கும் அரசின் திட்டத்தை பேச்சுவார்த்தை மூலம் நிறுத்தினோம். வவனியாவை மதவாச்சியுடன்இணைக்கும்திட்டத்தை பேச்சுவார்த்தை மூலம்தீர்த்து வைத்தோம். எல்லைகளை, நிலத்தை பாதுகாக்க வேண்டுமானால் நாம் பேச்சுவார்த்தை நடத்ததான்வேண்டும். இதை தீவிரவாதத்தினால் தீர்த்துவிட முடியுமா? அல்லது கோவை மகேசன் கரடிபோல உறுமினாலும் செய்துவிட முடியுமா?

''கடந்த காலங்களில் சிங்கள பொலிசார் பல விதமாக தமிழ்மக்களை துன்புறுத்தினார்கள். இதைதடுக்கவே ஊர் காவல்படை அமைக்கும் திட்டத்தை முன்வைத்தோம். இதை அமைக்கும் திட்டத்தில் வடமாகாணத்தில் சிக்கல்கள் இல்லை. கிழக்கு மாசாணத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை நாம் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைப்போம்.

மாவட்டசபை சரியாக செயல்பட்டு கணிசமான அதிகாரங்கள் எமதுகைக்கு வரும் அதை பூரணமாக பெறத்

(5ம் பக்கம் பார்க்க)

## 'தலைவரைத்தூற்றுவதுதந்தைசெல்வாவின் தீர்க்கதரிசனத்தைஅவமதிப்பதாகும்!' - காசி ஆனந்தன்

(மட்டக்களப்பு)

''என்னைஅபிவிருத்திபறவை என்கிறார்கள், சோத்துக்கவி என்றார்கள். இன்றுதலையாட்டி பொம்மை என்று எழுதுகிறார்கள். நான் பொதுச்சபைக்குக் கட்டுப்பட்டு, தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு தலையாட்டுகின்றோம். பொதுச்சபையில்சந்திரகாசனும் இருக்கிறார். அவரும் தலைவர்களின்முடிவுக்குகட்டுப்பட்டு நடக்கிறார்.சந்திரகாசன் தலையாட்டி பொம்மை என்று சுதந்திரனில் கோவைமகேசன் எழுதுவாரா? அவருக்கு இதை எழுத துணிவு இருக்கிறதா?'' என்று கேட்டார் கவிஞர் காசி ஆனந்தன்.

கல்குடாத்தொகுதியிலுள்ள சந்திவெளி பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டணியின் கருத்தரங்கில் உரை நிகழ்த்தியபோதே கவிஞர் காசி ஆனந்தன் மேற்கண்டவாறு கேள்விஎழுப்பினர்.

இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரை நிகழ்த்திய கவிஞர் காசி ஆனந்தன் மேலும் குறிப்பிட்டதாவது:

''ஒரு காலத்தில் தமிழ் ஈழ எல்லைக்குள் இருந்தவிடுதலைப் போராட்டம் இன்று அகிலஉலகின் கவனத்தினை ஈர்க்கும்அளவுக்கு விரிவுபட்டுள்ளது. முற்றிப் பழுத்த நிலையிலிருக்கும் இந்தக்கனியை சுவைக்காமலே வீணுக்க அதை அரிக்கின்ற புழுக்கள் அரிப்பு வேலையை தொடங்கியிருக்கும் வேளையில் இளைஞர்கள் சரியாக சிந்தித்து செயல்படவேண்டும்.

### தலைவனை மதிப்பது தொண்டன் கடமை

''தலைவனை மதிப்பதுதான் விடுதலைக்கு முக்கியம். அதன் பிறகுதான் மற்றையஎல்லாம். தலைவனின் சொல்படி அவன் காட்டியபாதையில் செல்வதே தொண்டனின் கடமையாகும்.

''எமது தலைவரை நாம்தெருவில் பொறுக்கி எடுக்கவில்லை. 35 ஆண்டுகள் இயக்கத்தில் ஊறி வளர்ந்தவர், இயக்கத்தின் வரலாறு பாதி என்றால் அமிரின் வரலாறு பாதி! தந்தை செல்வாவை தீர்க்க தரிசி என்கிறார்கள். தந்தை செல்வா தீர்க்க தரிசனத்தை மதிப்பதாகக் கூறுகிறார்கள். அவர் தீர்க்கதரிசனமாக தந்துவிட்டு சென்ற தலைவரை அவமரியாதை செய்து தூற்றி வருகிறார்கள். தலைவரை தூற்றுவது தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனத்தை அவமரியாதை செய்வது போன்றதாகும்.

''கோவைமகேசன், ஈழவேந்தன் ஆகியோர் ஒரு காலத்தில் எம்முடன் சேர்ந்து உழைத்தவர்கள். இன்று தள்ளிநின்று விமர்சிக்கிறார்கள். அவர்கள் வைக்கின்ற கேள்விகள், சந்தேகங்கள் தமிழ்மக்களை குழப்புகிற விசித்திரமானவையாக இருக்கின்றன. அதை கண்டு சிலர் தடுமாறுகிறார்கள்.

### ஈழ விடுதலை பிரகடனம்

''மாவட்டசபை இலங்கையின் வரலாற்றில் புதிதாக முளைத்தஒன்று. இயந்திரத்தை முடுக்கிவிடுகின்ற முயற்சியில் எமது தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன்பின் திட்டமிட்ட குடியேற்றத்தை தடுக்கும் அதிகாரம் எமது கைக்கு வந்துவிடும். நிர்வாக இயந்திரம் இயங்கத்தொடங்கவுள்ளது. அதனை அவர்கள் ஏதோ திரித்து விமர்சனம் செய்கிறார்கள்.

''ஈழவிடுதலை பிரகடனம் என்று ஒரு புரளி கிளப்பிவிடப்பட்டது. விடுதலைப்போராட்ட வரலாறு முக்கியமான ஒன்று. பிரகடனத்தை செய்துவிட்டால் உடனடியாக அரசு அமைக்கும் அதிகாரம் எமக்கு இருக்கவேண்டும். தமிழ் ஈழத்தின் ஒரு பகுதியையாவது எமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்த பின்தான் ஈழ பிரகடனம் செய்ய வேண்டும். அல்லது எம்மை அங்கீகரித்த நாட்டிலிருந்து செய்தால் படைப்பயிற்சி செய்யமுடியும். தற்கால அரசை அமைக்கமுடியும். அதில் அர்த்தமுண்டு. ஆனால் எம்மை முற்றாகஏற்றுக் கொள்ளாத நாட்டிலிருந்து கொண்டு பிரகடனப்படுத்துவதில் என்ன பிரயோசனம். திடீர் என்று தட்டுப்பட்ட உணர்ச்சியில் வந்த வைகுந்தவாசன், ஸ்ரீகாந்தன் ஆகியோருக்கு பின்னால் நாம்போக தயாராகவில்லை. தமிழ் ஈழம் என்ற பெரிய சங்கதியை சிறியவர்கள் ஏதோ வேடிக்கைக் கூத்தாகப் பார்க்கிறார்கள். அது சரியாக, நேரம் கழித்துசெய்ய வேண்டிற்று.

### ஒற்றுமையைக் குழப்பாதீர்கள்

''சிவசிதம்பரம் ஜனாதிபதிக்கு அருகில் இருந்துகுழைந்து குழைந்து பேசுவதாக கோவை மகேசன் அவர்கள் எழுதுகிறார். குட்டிமணியின் வழக்கில் சிவசிதம்பரம் குமுறி குமுறி பேசுகிறாரே அதை கோவை மகேசன் பார்க்கவில்லையா?

''எமக்கிடையே இலட்சியத்தில் குழப்பம் இல்லை. ஓடுங்கள் என்கிறீர்கள். நாங்கள் சொல்கிறோம். விழிப்பாக செல்லுங்கள் என்று! தமிழனுடைய ஒற்றுமை இலட்சியத்தை குழப்பாதீர்கள். அதைத்தான் அண்ணர் அமிரும் சொல்கிறார். வெறும் கைத்துப்பாக்கி சுதந்திரம் பெற்றுத்தராது. வெறுங்கை போராட்டம் தோல்வி கண்ட வரலாறுகள் நாம் அறிந்த உண்மையாகும். தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் பாலஸ்தீனம் நாட்டை இழந்தது போலவே தமிழர்களும் எமது பிரதேசத்தை இழக்க வேண்டிய நிலைவரும்'' என்றார்.

மாவட்ட சபைத் தலைவர் திரு. சி.சம்பந்தமூர்த்தி, திரு. எஸ்.மணியம், திருவாளர்கள் வே.தம்பிராசா, ஆர். சண்முகநாதன் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்.

திருமணம்
பிறந்த நாள்
வரவேற்பு வைபவங்கள்
பூப்புனித நீராட்டுவிழா
மற்றும் மங்கள வைபவங்களை
இயற்கை வர்ணக் கலரில்
வீடியோ
படப்பிடிப்பு செய்திட
தொடர்புகொள்ளுங்கள்
முகாமையாளர்
த பிறன்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680

## இளைஞர்களே....

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

தான் பேச்சுவார்த்தை நடத்துகிறோம்.

### அரசுடன் ஒட்டுகின்றோமா?

''சிலர் கூறுகிறார்கள் இராசதுரை, தேவநாயகத்தை போல் நாமும் அரசாங்கத்துடன் ஒட்டி உறவாடுவதாக! மாவட்ட சபைத் தேர்தலுக்கு முதல் நாள் இரவு கைது செய்தார்கள். என்மீது நம்பிக்கை இல்லாப்பிரேரணையை கொண்டுவந்து என்னை தூக்கிலிடவேண்டும் என பேசினார்கள். இதெல்லாம் அரசாங்கத்துடனான ஒட்டுதலா? அல்லது அன்பினாலா?

''பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் ஈழம் பற்றியே குர கொடுக்கிறோம். என்னை தூக்கில் போட்டாலும் சொல்லவேண்டியதை சொல்லியே தீருவேன் என பாராளுமன்றத்திலேயே கூறினேன். கோட்டே பாராளுமன்றத்திறப்பு விழாவில் எனதுபேச்சை சரியாகக் கேட்காத சில பத்திரிகைகளும் வேறுசிலரும் தமிழ் ஈழம் பற்றியே பேசவில்லை யென்கிறார்கள் சிங்கள மக்கள் தமது சுதந்திர இறைமை கிடைத்த விழாவைக்கொண்டாடும் இவ்வேளையில் தமிழ்மக்கள் தமது பூரண இறைமையை நாடி நிற்கிறார்கள் எனவும் 14ம் நூற்றாண்டின் பின் இலங்கையில் பலம் வாய்ந்த அரசாக திகழ்ந்தது யாழ்ப்பாண அரசு தான் என்று சரித்திர ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டினேன். எனது பேச்சைக் கேட்ட சிங்கள பிரதிநிதிகள் ஆத்திரத்துடன் இருந்தார்கள் வழமையாக மிகவும் நிதானத்துடன் பேசும் இராஜாங்க அமைச்சர் அன்று ஏதோ உளறிக்கொட்டினார், அவருக்கு விளங்கியது கூட இந்த கோவை மகேசன், ஈழவேந்தன் ஆகியோருக்கு விளங்கவில்லையே!

### இனியும் புத்தி வரவேண்டாமா

''தமிழ் இராச்சியத்தை உங்களுக்குத் தந்தால் உங்களிடையே மூட்டி மோதிக் கொள்வீர்கள். அதைத்தீர்க்க நாம் சிறில் மத்யூவைத்தான் அனுப்பவேண்டுமென அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் கேலியாகக் கூறினார்''. அதற்குப் பிறகுகூட இவர்களுக்கு புத்தி வரவேண்டாமா?.

''நிலத்தைப் பாதுகாக்க வேண்டியது எமது முக்கிய கடமை. இல்லையேல் பாலஸ்தீனர்கள் நிலத்தைப் பறிகொடுத்த நிலையில் போராடுவது போன்ற நிலை எமக்கு வரக்கூடாது!

''டாக்டர் தர்மலிங்கத்தை தந்தை செல்வா 60ம் ஆண்டுக்குமுதல் சென்று கேட்டார்; இயக்கத்தில் சேருமாறு! அப்பொழுது அவர் சொன்னார் ''நான் பனையில் தென்னம் பிள்ளை நாட்டியிருக்கிறேன் வளர்ந்தபிறகு வருகிறேன்'' என்று. இப்போது பனையில் தென்னை காய்க்கத் தொடங்கிவிட்டது. அதனால் அரசியலில் இறங்கியிருக்கிறார். ஆனால் நாங்கள் அப்படித் தென்னை நாட்டவும் இல்லை, அது காய்க்கும்வரை காத்திருக்கவும் இல்லை.

### அன்று பென்ஷன் உதவி கேட்டவர்...

''ஈழவேந்தன் பேச்சுவார்த்தை நடத்துவது பின்புஎன்று. அவர் மத்திய வங்கியில் இருந்து வேலைநிறுத்தம் செய்யப்பட்டபோது ''ஐயோ! பென்ஷன் இல்லாமல் போகப்போகிறதே. மந்திரியுடன் கதைத்து பென்ஷனைப் பெற்றுத் தாருங்கள்''! என்று என்னிடம் ஓடிவந்தார். அதற்காக நான் அமைச்சருடன் கதைத்தேன். அவருக்கு பென்ஷன் எடுப்பதற்கு அமைச்சருடன் கதைத்தது பிழை இல்லையாம்! ஆனால் தமிழ் மக்களின் நலனை காக்க பேச்சுவார்த்தை நடத்தக்கூடாதாம். இவர்கள்தானா

(7ம் பக்கம்பார்க்க)







# முதுமைக் காலத்தில்

## கையிலுள்ள அந்தக் குடை மட்டும் போதாது

**இலங்கை வங்கியின் தேசிய ஒய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து மேலும்பல புதிய நன்மைகளைப் பெறுங்கள்.**

அது வழங்கும் நன்மைகள் இதோ!

■ முழுமையாகச் செலுத்தி முடிந்ததும் போதுமான அளவு மாற்றிய ஒய்வூதியம்
மாதாந்தம் செலுத்தும் தொகையின் கிட்டத்தட்ட 500 மடங்கு

■ கணக்கு வைத்திருப்பவருக்கு மாதாந்த ஒய்வூதியம்
- மாதாந்தம் செலுத்தும் தொகையின் கிட்டத்தட்ட 10 முதல் 60 மடங்கு

■ வாழ்க்கைத் துணைக்கு மாதாந்த ஒய்வூதியம்
- கணக்கு வைத்திருந்தவருக்குச் செலுத்திய அதேயளவு தொகை

■ பணம் செலுத்த ஆரம்பித்து 5 - வது வருடத்திலிருந்து 5 வருடங்களுக்கொரு முறை போனஸ்
- முதல் 4 போனஸ் தொகை மட்டும் செலுத்தும் முழுத்தொகையிலும் அதிகமானது.

■ இலவச காப்புறுதி
- கணக்கு வைத்திருப்பவரின் வயதைப் பொறுத்து ருபா 40,000/- வரை

■ உரித்தாளர் அல்லது நியமத்தருக்கு நன்கொடை
- மாதாந்தம் செலுத்திய தொகையின் சுமார் 1000 மடங்கு

■ கடன் வசதி
செலுத்திய தொகையின் 75%. வரை

செலுத்த வேண்டிய பணம்

20 வருடங்களுக்கு மாதாந்தம் 10 ரூபாவின் பெருக்கங்களில் ஆகக் குறைந்த தொகை 30 ரூபா. அல்லது 20 வருடங்களுக்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகையின் 40 % க்கும் குறைவான தொகையை ஒரே முறையில் செலுத்தலாம். வருடாந்த அல்லது அரை வருடத்திற்கு ஒரு முறை என்ற அடிப்படையிலும் 4,5 அல்லது 10 வருடாந்தத் தவணைகளிலும் பணத்தைச் செலுத்தலாம்.

ஒரு விசேட சலுகை

திட்டத்தில் இந்த ஆண்டு (1982) சேருபவர்களுக்கு, வங்கி வட்டி வீதங்கள் குறைந்தாலும், இது சம்பந்தமான வங்கி வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போனஸ் தொகைகள் வழங்கப்படும். வட்டி வீதங்கள் கூடினால் கூடிய போனஸ் வழங்கப்படும்.

உங்களுக்கு வசதியான ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளரைச் சந்தித்து, இலங்கை வங்கி ஒய்வூதிய (1981) திட்டம் சம்பந்தமான விபரங்களைத் தரும் இலவச வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

BANK OF CEYLON இலங்கை வங்கி

# இலங்கை வங்கி

மூன்ருவது வாரம்
ஹறரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

Regal Jaffna
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
CHARLES BRONSON
BREAKOUT

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப் பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
WILD GEESE

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
புதிய பிரதி)
சிவாஜி மகாகவி காளிதாஸ்
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

ராணி தினசரி 10–30, 2–30, 6–15, 9–30
(யாழ். நகர்)
முன்பு காணத் தவறியவர்களுக்கு மீண்டும் கண்டுகளிக்க கிடைத்த அரிய சந்தர்ப்பம்!
பாக்கியராஜ் - ரதி நடித்த
புதிய வார்ப்புகள்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

RAJAH Daily at 10–30, 2–00, 4–30 7–00 and 9–30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults – Scope Color)
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)



யாழ். நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை விருந்தினர் விடுதி முன்னைநாள் அதிபரும், காங்கேசன்துறை வாடிவீடு பொறுப்பாளராக பதவி வகித்தவரும், தற்பொழுது யாழ்ப்பாணம் வாடிவீடு முகாமையாளராசக்கடமையாற்றுபவருமான திரு. தியோப்பிள்ளை பத்திநாதன் யாழ் மாவட்ட நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசுவாமிமுன்னிலையில் சமாதான நீதவானுகப் பதவியேற்ருர். இவர் ஓர் சமூக நலத் தொண்டராகவும் இருந்துவருகின்ருர்.

## ஸ்ரீசிவபாலயோகி தரிசனம்

(சுழிபுரம்)

ஸ்ரீ சிவபால யோகி சுவாமிகள் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திற்கு வருகைதந்து அடியார்களுக்கு ஆசீர்வாதம் வழங்டனுர். ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமியை வணங்கி திருநீற்றுப் பிரசாதம் பெற்றனா.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் சுவாமிகளுக்கு மாலை சூட்டி வரவேற்ருர். சுவாமிகள் ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் பூசை வழிபாட்டில் கலந்து தீப தரிசனம் பெற்றுக்கொண்டார். சுவாமிகளுடன் வந்த கோஷ்டியினர் பஜனை செய்தனர்.

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
சுதாகர் – ராதிகா
சுவர் இல்லாத சித்திரங்கள்

# "வடக்கே திரும்பிப்பார்த்த போது வீடு எரியத் தொடங்கியது"

## வீடு எரிப்பு வழக்கில் சாட்சியம்

(டங்குடுதீவு)

"சம்பவதினம் நான் கோயிலால் வந்து மனைவியிடம் கஞ்சி வாங்கிக் குடித்துவிட்டு, மாடுகளைப் பார்ப்பதற்காக ரோச் லைற்றையும் எடுத்துக்கொண்டு சென்றேன். அப்போது எனது பேரனும் என்னேடு வந்தார். அப்போது லைற்றை அடியுங்கோ என்று பேரன் சொன்னுர் பின்னர் எதிரிகள் இருவரும் ஓடிச்செல்வதாகப் பேரன் கூறினுர். தெற்கு முகமாக மாட்டைத்தேடிச்சென்ற நரம் வடக்கே திரும்பிப்பார்த்த பொழுது வீடு எரியத் தொடங்கியது. நான் யாரோ கொழுத்திவிட்டார்கள் என்று குழறினேன் அயலவர்கள் ஓடி வந்தும் நெருப்பை அணைக்க முடியாது போய்விட்டது. இவ் எரிவினுல் எனக்கு பத்தாயிரம் ரூபா நஷ்டம்"

புங்குடுதீவில் வீடு எரித்ததாக தங்கத்துரை தவமணிதேவி, ஆனந்தராசா தங்கம்மா ஆகியோருக்கு எதிராக பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாட்சியமளித்த சின்னத்தம்பி பொன்னையா மேற்கண்டவாறு கூறினுர்.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா ஆஜராஞர். முதலாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ப. கதிரவேலுவும், இரண்டாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனும் ஆஜராகினர்

மேல் விசாரணை இம்மாதம் 10ம் திகதிக்கு ஒத்துவைக்கப் பட்டுள்ளது. [வெ]

# இன்றைய பலன்

த்திரை மாதம் 25ம் திகதி சனிக்கிழமை
(8—5—82)

மேடம்: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவார்கள், சிலர் வாழ்க்கையில் ஏமாற்றத்துக்கும் இடமுண்டு, அதிக பேச்சினைத் தவிர்த்து காரியத்தில் கவனமாக இருக்கவும்.

இடபம்: வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், எண்ணம் போல் யாவும் நடக்கும், உறவினர்களின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கலாம்.

மிதுனம்: தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்துக்கும் இடமுண்டாம், புதியமுதலீட்டை ஒத்தி வைக்கவும், நண்பர்கள் சிலரால் வேதனையும் உருவாகலாம்.

கடகம்: ஒளிமயமான நல்ல ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் உற்சாகத்தில் பெற்ருேரும் துணைநிற்பார்கள், கலகலப்பான சுபதினமாகும்.

சிங்கம்: தொழில் துறையில் நல்ல வருமானமும் கிடைக்கும், வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு, புதிய உடன்படிக்கை மூலம் நல்ல திருப்பமும் ஏற்படலாம்.

கன்னி: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும், சிலருக்கு பதவி உயர்வும் ஏற்படலாம், வெளியிடத்துத் தொடர்புகள் மூலம் செல்வாக்கும்பெருகும்.

துலாம்: எக் கருமத்தையும் எண்ணித்துணிக, அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடுவீர்கள், வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும், இதயம் வேதனைப்படும், திடசித்தம் இருப்பின் எதையும்சமாளிக்கலாம்.

தனு: பிறருக்கு உதவுவதில் முன்னிற்பீர்கள், இதன்மூலம் பணமும் செலவாகும், அரசியல்வாதிகளுக்குஇன்று அதிர்ஷ்டமான தினமாகும், புகழும் வந்துசேரும்.

மகரம்: துன்பத்தின் ரேகைகள் படரும், பெரியோர்களைப் பகைத்துக்கொள்ளாது பெருமையால் நடந்துவரவும், அயலவர்களுடன் அன்பாகநடந்து கொள்ளவும்.

கும்பம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள்.

மீனம்: புத்திரவழியால் புகழுண்டு; புதியபாதையில் நடைபோடுவீர்கள், அதிகமாகப் பிணைப்புக்கள் பலப்படும், நல்ல சுபதினமாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சிவபாலயோகிக்கு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

பாரத தவசித்தி பெற்ற ஸ்ரீ சிவபாலயோகியாருக்கு கடந்த புதன்கிழமை கோண்டாவிலில் வரவேற்பு உபசரணைகள்இடம் பெற்றன.

புதன்கிழமை மாலை யோகியார் கோண்டாவில் பலாலி வீதி அற்புத நர்த்தனவிநாயகர் ஆலயத்தில் வரவேற்கப்பட்டபோது பலநூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். சுவாமியார் தரிசனத்திறகாக ஆலயத்தில் அமர்த்தப்பட்டபோது, ஆண்களும் பெண்களுமாகப் பல நூற்றுக்கணக்கானேர் யோகியாரை வணங்கி தரிசனம் பெற்றனர். கியூ வரிசையில் பக்தர்கள் நீண்ட நேரமாக நின்று யோகி சுவாமியிடம் தரிசனம் பெற்றனர்.

இதன்பின் யோகியார் இருபாலைவீதி வழியாக கோண்டாவில் பழைய காளிகோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

(வண். நிரு)

## வரப்பெற்ருேம்

'ஊற்று' தை – பங்குனி இதழ் வரப்பெற்ருேம்.

வழமைபோல் விஞ்ஞான. அறிவியல் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ள இச் சஞ்சிகை உயர் வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கிடைக்கும் இடம் ஊற்று நிறுவகம் மாரி அம்மன் ஒழுங்கை திருநெல்வேலி

## மகாநாடு

(அரியாலை)

வட பிரதேசத்தில் பணிபுரியும் ரோமன் கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவ ஆசிரியர்களின் மகாநாடு இன்று காலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டில் கல்வித் திணைககளத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ கல்விப்பிரிவுச் செயலாளர் திரு. எல்மோ பி. விடிஜயசிங்காவும், அருட்திரு கௌத் பெர்னண்டோவும், இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்கச் செயலாளர் திருமதி கிறிஸ்ரா பெர்னண்டோவும் கருத்துரை வழங்குவார்கள்.

## 2 கோடி ரூபா கடனுதவி

[கொழும்பு]

தேயிலைக் கைத்தொழில் துறைக்கு புனர்வாழ்வளிப்பதற்காக உலக வங்கி இலங்கைக்கு 2 கோடி ரூபாவை கடனுதவியாக வழங்கவுள்ளது. (வே

யாழ். மனோகராவில்
ஹவுஸ் புல் ! ஹவுஸ் புல் !! ஹவுஸ் புல் !!!
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன்
வெள்ளி விழாவில் பரிசு பெற்ற சிறந்த காதல் காவியம்.
★ கார்திக் ராதா தியாகராஜன் ★



★ இன்னும் பலர் திறம்பட நடித்த ★
பாரதிராஜாவிற்கு திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாதபடியால் ஆசனங்களுக்கு முந்துங்கள்.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

L. D. 5 வான் பெட்போட் வான் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. சிறிதரன் மரக்காலை, 438, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3090

நல்ல நிலையிலுள்ள 25 ஸ்ரீ தொடர்பிலக்க 135 டிராக்ரரும் EY தொடர்பிலக்க ஏ 40 காரும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. எஸ். கணபதிப்பிள்ளை, 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3121

யாழ். அரியாலை காலையடியில் 40 பரப்பு தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: ப. திருநீலகண்டன், 12/3, அருளம்பலம் லேன், அரியாலை, யாழ்ப்பாணம். 3113

கிணற்றுடன் ஒன்றரைப் பரப்பு சற்சதுரகாணி. வீடு கட்டுவதற்கு உகந்தது. தொடர்பு: 34, புங்கங்குளம் வீதி. கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7855. 3104

## தேவை

தச்சுவேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மரக்கடைச்சல் (ரொயிஸ்) வேலை செய்வதற்கு இரு ஆட்கள் தேவை. (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) விளம்பர இல: 3091, மே/பா ''ஈழநாடு'' யாழ்ப்பாணம். 3091

Refrigerator Technicians குளிர்சாதனப்பெட்டி மெக்காணிக்குகள். குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவை செய்தால் உற்பத்திச்சாலையில் பயிற்சி அளிப்பதற்குக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து, நற்சான்றிதழ்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்; 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3095

## வகுப்பு

எயர் கொண்டிசன் புதிய வகுப்பு 10 – 5 – 82 – ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:– Auto Cool Engineers, கந்தப்பசேகரம் வீதி (சாந்தி சினிமா முன்பாக) யாழ்ப்பாணம். 3085

## வாடகைக்கு

யாழ். பெரியகடை அருகில் சகல நவீன வசதிகளுடன் அழகிய பெரிய புதிய பகுதி வீடு. வசதியுள்ள இளம் தம்பதிகட்கு. சிறிய குடும்பம். விபரம்: 19, கடைச்சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால். நீராவியடி. Phone 335 (3115)

யாழ். பெருமாள் கோவிலடியில் சகல வசதிகளும், சாப்பாட்டுடன் மாணவிகளுக்கு மாத்திரம் தங்குவதற்கு இடமுண்டு. விபரங்களுக்கு: செயலாளர், மல்ரி சேவிஸஸ், 234, ஆஸ்பத்திரி விதி, யாழ்ப்பாணம். 3088

## பயிற்சி

றேடியோ – டெலிவிஷன் எலக்றிக் வயரிங் வகுப்புகள் பூரணபயிற்சியுடன் 12–05–82ல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ்கள் வழங்கப்படும். கே. ஜீஸ் இன்ஸ்ரிரியூட், 37, (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3094

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

நல்லூர் என்னும் இடத்தைச் சேர்ந்த திருமதி எமிலி நல்லம்மா நதானியேல் என்பவரினதும் மரண சாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்.

மரணசாதன நியாயாதிக்கம்
இல T/3665

1. கேபேட் வில்லியம் அருணோதயதாஸ் நதானியேல்
2. ஆதர் வில்சன் நதானியேல் சந்திரபிரகாஸ் இருவரும் நல்லூர்.
3. ஜேம்ஸ் விக்ரர் செல்வரத்தினம் நதானியேல் 114, வெலுவான பிளேஸ் டெமற்ற கொட.

மனுதார்கள்

மேலே இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டதெனவும் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 31ஆந்நாளன்று திகதியிடப்பட்டது. 3112

### இளைஞர்களே...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தியாகிகள்? ''காகம் திட்டி மாடு சாவதில்லை'' ஆனல் வாலிபர்கள் ஒருபோதும் இவர்கள்பின் போகக்கூடாது.

#### வெளியில் காணமுடியாது

''நாம் இராசதந்திரத்துடன்தான் நடக்கிறோம். அதை எல்லாம் வெளியில் சொல்ல முடியுமா? இரண்டொரு ரிவோல்வரை வைத்து சுடுவதால் சுதந்திரம் கிடைத்து விடுமா? அப்படிச் சுதந்திரம் பெற்ற நாடு கிடையாது. சிறுபிள்ளைத்தனமாகச் சிந்திக்கக்கூடாது.

''இந்திய விடுதலைப் போராட்டத்தில் பகவத் சிங் தீவிரவாதியாக இருந்தார். அவர் எக்கட்டத்திலாவது காந்தியுடன் மோதினரா? காந்தி சொன்னதைப் பிழை என்று சொன்னரா?

#### இனத்தின் பலம் ஒற்றுமைதான்

''எமது பலத்தை, எதிரியின் பலத்தை–பலவீனத்தை அறிந்தே தளபதி படைகளை களத்தில் இறக்கவேண்டும். ஆகவே எமது இனத்தின் பலம் ஒற்றுமைதான்.

''தமிழ் ஈழம் பற்றி முடிவு எடுத்தபின்னர்கூட தந்தை செல்வா சிறிமாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பல இன்னல்களை எமக்குத் தந்த ஸ்ரீமாவுடன் டிரயல்–அட்–பார் வழக்கு விடயமாகப் பேசினர். தரப்படுத்தல், குடியேற்றம் தொடர்பாகப் பேசினர். ஆகவே தந்தை செல்வா தமிழ் ஈழ முடிவுக்குப்பின் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்பது தவருகும்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காரைநகர், அறுகம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லைநாதன் செந்தில்நாதன் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3661

நடராஜா மகள் திரிபுரசுந்தரி, 78, கே. கே. எஸ். ரோட் (கணேசன் ஸ்ரோர்ஸ்), யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 11ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1982ம் ஆண்டு பங்குனி மாதம் 8ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
ஒப்பம்
தா. குலஞானம்
பதிவாளர்.

வரைதல்
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி. 3097

### நலன்புரிச்சங்க உத்தியோகத்தர்

(அரியாலை)

யாழ். விற்பனை அபிவிருத்தித் திணைக்கள ஊழியர் சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவில் காப்பாளராக பிரதி ஆணையாளர் செ. கணேசநாதனும், தலைவராக சூ சிறிலும், உபதலைவராக எஸ். வேலுப்பிள்ளையும், பொதுச்செயலாளராக கே. ஈஸ்வரானந்தனும், கலைச் செயலாளராக வி. திவ்வியராசாவும், விளையாட்டுச் செயலாளராக க. கணேசலிங்கமும், பொருளாளராக செல்வி டேவிற் ஜீவாவும், கணக்குப் பரிசோதகராக வி. இராமலிங்கமும் ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.


யாழ்நகருக்கு வெளியே நேரடியாக
இசைத்தட்டுகளிலிருந்து
கசெற்களில்
பாடல்கள் பதிவு செய்து தரும் ஒரே ஸ்தாபனம்
"துர்க்காஸ்"
றெக்கோடிங் (B)பார்
68, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.
V. P. P. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
நாளை வரிவிளம்பரம் பார்க்கவும். 3120



மத்திய கிழக்கு துறைமுக
வேலைவாய்ப்புக்கள்

மத்திய கிழக்கு நாடுகளில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்.

சிவில் எஞ்ஜினியர்ஸ், மெக்கானிக்கல் எஞ்ஜினியர்ஸ், டிராஸ்மென், டிராக்கர் மாஸ்டர்ஸ் (Dredger Masters), டெக்-போர்மன், டெக் கான்ட்ஸ், மெக்கானிக்கல் போர்மன், கிறிஸர்ஸ், எலெக்ரிசன்ஸ், வெல்டர், கிறேன் ஒப்பிரேட்டர், மற்றும் புல்டோசர் ஒப்பிரேட்டர், கூலியாட்கள், சமையல்காரர்கள், மெஸ் போய்ஸ், சுத்திகரிப்பவர்கள், கலி போயிஸ், ஹெல்மென்ஸ், மேசன், தச்சுவேலை செய்பவர்கள்.

விண்ணப்பங்களை சான்றிதழ், பாஸ்போட் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

நேரடியான சகல தொடர்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளது. தரகர்கள் தேவையில்லை. நேரடித் தொடர்புகொண்டால் மனு நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் கிடைக்கப்பெற்றதும் தகவல் மறு கடிதத்தில் அறிவிக்கப்படும்.

Construction & Development Co., Ltd,
37, S. De. S. Jeyasinghe Mawatha, Nugegoda.
தொழில் லைசென்ஸ் இல: 96
தொழில் ஆணையாளர் பதிவிலக்கம்: FE/1/118
3114




எஸ். பி. சாமிக்கும்
இந்த மீசைக்காரருக்கும்
என்ன தொடர்பு ?
நாளை (9-5-82) ஞாயிறு
ஈழநாடு படியுங்கள்
3118


## மரண அறிவித்தல்

### வேலன் செல்வராசா

உரும்பிராய் மேற்கை பிறப்பிடமாகக்கொண்ட வேலன் செல்வராசா என்பவர் மேற்கு ஜெர்மனியில் 29–4–1982–ல் காலமானுர். இவர் வேலன் செல்லியின் மகனும், பூபாலசிங்கம் (கிளி), திருச்செல்வம், கண்மணி, காஞ்சனு, பொன்மணி, புனிதம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவர்.

அன்னுரின் பூதவுடல் 10–ம் திகதி காலை உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

3122

# "பாரம்பரியத்தை பெண்கள் பாதுகாக்கவேண்டும்"

## --கலாநிதி இந்திரபாலா

(யாழ்ப்பாணம்)

''எமது பண்பையும், கலா சாரத்தையும் அழியவிட்டு அங்கலாய்ப்பதிலும் பார்க்க அவற்றைப் பேணிக்காப்பதே மேலான கடமையாகும். குறிப்பாக பெண்கள் தமது பாரம்பரியத்தைப் பேண வேண்டும்'' என்று கலாநிதி கே. இந்திரபாலா யாழ். வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர மாணவர்ஒன்றியத்தின் இராப்போசன விருந்தில் பிரதம விருந்தனராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது, ''அன்று தொட்டு இன்று வரை பாடசாலை வாழ்க்கை முறையிலும் சமூகத்தின் நிலையிலும் எவ்வளவோ மாற்றங்களைக் காணக்கூடியதாக உள்ளது. கட்டுப்பாடுகள் மாறி எதிலும் ஒரு புதுமையான மனப்பாங்கு வளருகின்ற கால கட்டத்தில் நெறிப்படுத்த வேண்டியது மாணவரின் பொறுப்பு. எமக்குள்ள தேவைகளைப் புரிந்து கொணடு வாழ்வை அமைக்கவேண்டும். எமது பண்பாட்டையும், கலா சாரத்தையும் நாம் காத்துக் கொள்ளவேண்டும். பெண்கள் பண்பாட்டைக் கட்டிக் காப்பவர்கள். போற்றக்கூடிய பண்பாட்டு அம்சங்கள் பெண்களிடம்தான் காணப்படுகின்றன. குறிப்பாக பெண்கள் தமது பாரம்பரியத்தைப்பேணவேண்டும்'' எனக் கூறினர்.

இவ்வைபவம், கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவி செல்வி நிரஞ்சினி பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றது. வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி அ. இராசரத்தினம் தமதுரையில், ''இக்கல்லூரி இதுவரை காலமும் அநேக வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், பட்டதாரிகளையும், கணக்காளர்களையும் உருவாக்கிப் பெருமைகொண்டுள்ளது. அதே போலத் தொடர்ந்தும் எதிர்காலத்தில் வேம்படி தனது பணியைத் திறம்படச் செய்யுமென்பதில் எதுவித ஐயமுமில்லை'' என்று கூறினர்.

வேம்படியின் பழைய மாணவி திருமதி சாந்தி அருளானந்தம், மாணவர் ஒன்றியச் செயலாளர் செல்வி தர்சினிசோதிநாதன், யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன் யூட் ரேகன் ஆகியோரும் பேசினர்.

### மாவிட்டபுரத்தில்

# கோஷ்டி மோதல்;

## 4 பேர் ஆஸ்பத்திரியில்!

[நல்லூர்]

உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றையடுத்து நான்கு பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது–60), கந்தசாமி (வயது –28), தவபாலசிங்கம் (வயது–1°) ஆகியோர் கத்திகுத்து அடிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியிலும் தனபாலசிங்கம் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [இ]


## லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநர் (Lathe Man) தேவை.

சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல்வேக்ஸ் நீர்வேலி.**

3084


உள்ளூராட்சி தேர்தல்

## மார்க்கிரெட் தட்சருக்கு

# பெரும் வெற்றி

லண்டன், மே 7

லண்டனில் நடைபெற்று வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மக்களின் ஆதரவு; பிரதமர் மார்க்கிரெட் தட்சரின் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கே அதிகளவு காணப்படுகின்றது.

கம்யூட்டர் மூலமாக வெளியாகிக்கொண்டிருக்கும் முடிவுகளில் இதுவரை கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 39 சதவீத வாக்குகளும்' பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சிக்கு 32 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

தொழிற்கட்சித் தலைவர் இத்தேர்தல் பற்றித் தெரிவிக்கையில் ''தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கக் கட்சிக்கே மக்களின் ஆதரவு அதிகமாக இருக்கும். ஏனெனில், போக்லன்ட் தீவுகளுக்குப் படைகள் அனுப்பப்பட்டுள்ளமையே பெரும் பிரசாரமாகக் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு அமைந்துள்ளது'' என்ருர். (கி)

## 'செங்கதிர்' வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை ஏடான 'செங்கதிர்' வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஏட்டை வெளியிட்டுவைப்பார். (உ)

## பனம்பொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பணியை பனம் பொருள் சபை செய்துள்ளதாகவும் அடுத்த மாதத்துக்கிடையில் மன்னரில் தும்புத்தொழிற்சாலை இயங்கும் என்றும் இங்கு பலருக்குவேலைவாய்ப்பு வழங்கப்படுமென்றும் கூறினர்.

அரசாங்க அதிபர் திரு. த. வாமதேவன் உதவி திட்டமிடல் அதிபர் திரு. தீபகலாலன் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

## பற்றிக்குக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்திசபை நிர்வாகச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. பற்றிக்மேற்படி இருபதவிகளையும்தொடர்ந்து வகித்து வருவார். இவர் முன்னர் மூல்லைத்தீவு மாவட்ட முதலாவது மேலதிக அரசாங்க அதிபராகவும் பதவி வகித்து வந்தார். (இ)

## பிரிட்டிஷ்

(1-ம் பககத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

### அமைதி முயற்சி தொடர்கிறது

இதேவேளையில் போக்லண்ட் நெருக்கடிக்குச் சமாதான முறையில் தீர்வுகாணும் முயற்சியில் ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டி கியூலர் ஈடுபட்டுள்ளார். (இ)

## வருடாந்த கூட்டம்

[அரியாலை]

அல்லைப்பிட்டி சென்ற் பிலிப்ஸ் சனசமூக நிலையத்தின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை நிலைய மண்டபத்தில் யாழ், மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பொதுக்காரியதரிசி திரு. சி. சி, வரதராஜா தலைமையில் நடைபெறவிருக்கிறது.




உங்கள் பணத்திற்கு....

25% வட்டி...

சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

25% 2 வருட வைப்புப்பணத்திற்கான கால முதிர்வு வட்டி...

23% 2 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

21% 1 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ. 500க்கு அதிகமான வைப்புக்கு | | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| | மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | |
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

இயக்குனர்கள

1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என் குமாரசாமி, F.C.A.(Eng. & Wales), ATII (Eng.) M.Inst A.M (Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons, A. I. B. (Lond) சட்டத்தரணி
6. திரு. டி. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A., A.C.M.A
7. திரு. டபிளயு. பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ஈ. குணசேகரா

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,616 | 1,706,147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 11,325,480 | 42,139,162 |
| நிகரலாபம (வரிகட்ட முன்) | 181,417 | 667,461 | 2,135,874 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | 1,635,873 |
| பங்குலாபம் | | 250,000 | 187,500 |

வியாபார நோக்கங்கள்

★ முதலீட்டு வைப்பு

★ கைத்தொழிலாளர்களுக்கு. இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி

★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.

தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

காரியாலயம்: 54, பாங்ஷால் வீதி, கொழும்பு.


## மரண அறிவித்தல்

### திருமதி துு. சின்னத்தங்கச்சி

சுன்னுகம் திருமதி துரையப்பா சின்னத்தங்கச்சி காலமானுர். இவர் காலஞ்சென்ற துரையப்பாவின் (மலாயன் பென்சனர்) மனைவியும, காலஞ்சென்ற புத்தூர் நடராசாவின் (தம்பி) சிறியதாயாரும், தில்லைச்சிற்றம்பலத்தின் பாட்டியாருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் சுன்னுகத்தில் நடை பெறும். இவ் அறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

3126

## மரண அறிவித்தல்

### திருமதி நைமிசாரணியநாயகி வைத்தியநாதன் (நல்லபிள்ளை)

தாமுவளவு வல்வெட்டி

காலஞ்சென்ற வைத்தியநாதனின் மனைவியும், Dr. மகாதேவன் [F. A.O. Rome] பஞ்சலிங்கம் [இளைப்பாறிய இலங்கைவங்கி மாவட்ட முகாமையாளர்], புவனேஸ்வரி, புஷ்பவதி (ஆசிரியை கிளிநொச்சி க.ம. வித்தியாலயம்), நவமணி [நைஜீரியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகபூஷணி, [Rome] இந்திர நாயகி, பத்மநாதன் (நீதிமன்றம், யாழ்ப்பாணம்) பத்மநாதன் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை], இராசநாயகம் [நைஜீரீயா] ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று [8 – 5 – 82] சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஊறணி இந்து மயானத்தில் நடைபெறும் உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

3127

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் மே மீ 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.